**செ. கு. எண்**:209 **நாள்**:5.06.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5.6.2012

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கொத்திமங்கலம் கிராம பைபாஸ் சாலை அருகில், கொத்திமங்கலம் கிராம காலனியைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் திரு. கந்தசாமி 3.6.2012 அன்று சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது, மாமல்லபுரம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில், பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. கந்தசாமியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்தில் காலமான கந்தசாமியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**